# மொகலாய ஆட்சிக்காலத்தில் கட்டிடக்கலை

மொகலாயர்களுடைய கட்டிடக்கலை என்பது மொகலாய மன்னர்கள் பதினாறாம், பதினேழாம் மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் அவர்களுடைய ஆட்சியின்கீழ் இருந்த நாடுகளில், குறிப்பாக, இந்தியத் துணைக் கண்டத்தில் மேற்கொண்ட கட்டிடப்பணியாகும். மொகலாயர்களுடைய கட்டிடக்கலையின் மாதிரிகள் மற்றும் அடையாளங்கள் தற்காலத்தில் இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் காணக்கிடைக்கின்றன. மொகலாயர்கள் நினைவிடங்கள் (மஃக்பறாக்கள்) கட்டுவதில் முக்கிய கவனம் செலுத்தினர், இது இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களுக்கு மாறுபட்டதாகும் மற்றும் இஸ்லாமிய மார்க்கத்தில் இதற்கான இடமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான முக்கியக் காரணம், இவர்களுக்கு மார்க்கச்சட்ட விளக்கங்களில்லாதிருந்தது மற்றும் இந்தியத் துணைக்கண்டத்தின் பழங்கால கலாச்சார்த்தின் தாக்கம் ஆகும்.

மொகலாய மன்னர்கள் கட்டிடக்கலையில் மட்டும் ஆர்வம் காட்டவில்லை, அவர்கள் பல்வேறு நகரங்களைக் கட்டமைப்பதிலும் கட்டிடங்கள், பூங்காக்கள் அமைப்பதிலும் மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளனர். டாக்கா, டில்லி, ஃபதஹ்பூர் சிக்ரி, குஜ்ராத் மற்றும் ஔரங்காபாத் ஆகிய நகரங்களை இவர்கள்தான் கட்டமைத்துள்ளனர். இந்த நகரங்கள் மற்றும் பல நகரங்களில் அழகான கோட்டைகள், மாளிகைகள், பள்ளிவாசல்கள், தோட்டங்கள், பூங்காக்கள் மற்றும் நெடுஞ்சாலை ஒய்வு மாளிகைகள் அகியவற்றைக் கட்டியுள்ளனர். அவற்றுள் மிகப்பெரும் எண்ணிக்கையிலான கட்டிடங்கள் இன்றும் நிலைத்திருக்கின்றன. அழகான கட்டிடங்களைக் கட்டுவதில் இந்தியத் துணைக்கண்டத்தில் இந்த ஆட்சியாளர்களின் பங்களிப்புக்கு நிகராக எந்த ஒரு ஆட்சியாளரின் பங்களிப்பும் இல்லை என்றால் அது மிகையாகாது. அவர்கள் எந்தெந்த நகரங்களில் மாபெரும் கட்டிடங்களைக் கட்டியுள்ளனரோ அவை இன்றும் அந்த நகரங்களின் மிகவும் அழகான மகத்தான கட்டிடங்களாகவே திகழ்கின்றன. முஸ்லிம் ஆட்சியாளர்களின் எழுச்சிமிகு ஆட்சிக்காலத்தின் இரண்டாவது கட்டத்தில் இஸ்லாமிய உலகில் காணப்படும் மிக அழகான கட்டிடங்கள் இந்தியத் துணைக்கண்டத்தின் மொகலாய அரசர்கள் காலத்தில் கட்டப்பட்டவை மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. மொகலாயர்களுடைய அட்சிக்காலத்தின் கட்டிடக்கலையின் சிறப்பம்சங்கள் தனித்தன்மை வாய்ந்தவையும் நிகரற்றவையுமாகும்.

## தாஜ்மஹால்

இது மொகலாயர்களுடைய கட்டிடக்கலையின் மகத்தான அற்புதங்களின் எடுத்துக்காட்டு மற்றும் மிகச்சிறந்த முன்மாதிரியாகும். இதனை மொக

www.uzaifalahi.com

லாய மன்னர் ஷாஜஹான் தன்னுடைய மனைவி மும்தாஜ் மஹல் நினைவாகக் கட்டினார். இதன் கட்டிடக்கலை பாரசீக, துருக்கிய, இந்திய மற்றும் இஸ்லாமியக் கட்டிடக்கலை அகியவற்றின் பல்வேறு அம்சங்கள், அடிப்படைகள் ஒருங்கே பெற்ற நிகரற்ற எடுத்துக்காட்டாகும். 1983 ல் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு இதனை உலக நாடுகளின் கலாச்சார மரபின் அடிப்படையிலான அற்புதங்களில் ஒன்றாகக் கருதியது, அத்துடன், இதனை உலகக் காலாச்சார மரபின் புகழ் பெற்ற கட்டடிடங்களில் ஒன்றாகத் தேர்வுசெய்து அறிவிக்கப்பட்டது. தாஜ் மஹால் இந்தியாவின் இஸ்லாமியக் கட்டிடக்கலையின் நிகரற்ற வரலாற்றுச் சின்னமாகக் கருதப்பட்டது. இந்தக் கட்டிடம் கி.பி 1625 முதல் கி.பி 1650 வரையிலான மொத்தம் 25 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது. இதனைக் கட்டுவதற்காக நான்கரை கோடி ரூபாய் செலவானதாகக் கூறப்படுகின்றது. இருபதாயிரம் கட்டிடக் கலைஞர்களும் பணியாரளர்களும் இதனைப் கட்டடுவதில் பங்காற்றியுள்ளனர். இக்கட்டிடம் முழுவதுமே பளிங்குக் கற்களால் கட்டடப்பட்டுள்ளது. இதன் நீளம் மற்றும் அகலம் 130 அடியாகவும், உயரம் 200 அடியாகவும் உள்ளது. இக்கட்டிடத்தின் பளிங்குக் கற்களாலான சுவர்களின்மீது பல்வேறு நிறங்களில் அழகான மொசைக் அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள மஃகபரா விற்கு உள்ளேயும் வெளியேயும் மொசைக் வேலைப்பாட்டின் மூலம் திருக்ஃகுர்ஆன் வசனங்களை அமைத்துள்ளனர். இக்கட்டிடத்தின் நான்கு மூலைகளிலும் மினாரா கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன. இக்கட்டிடத்தின் தரை மட்டத்தைவிட பல அடிகள் உயரமான முற்ற மேடை சிகப்பு நிறக்கற்களாலானது. இதன் பின்புறமாக யமுனா நதி ஓடுகின்றது மற்றும் இதன் முன்புறத்தில் ஒரு நீர்க்குளம் கட்டப்பட்டுள்ளனது, அதனுள் அலங்கார நீர்த்தாரைகள் அமைக்கப்பட்டுள்ளன, அத்துடன் மொகலாயர்களுடைய வழக்கத்தின்படி பிரசித்திப்பெற்ற அழகான பூங்காவும் உள்ளது. இந்த கல்லறைக்குள் மும்தாஜ் மஹல் மற்றும் ஷாஜஹானுடைய கல்லறைகள் உள்ளன.

## டில்லியில் உள்ள செங்கோட்டை

யமுனா நதிக்கரையில் அமைந்துள்ள செங்கோட்டை மொகலாய மன்னராட்யின் பொன்னான வரலாற்றுச் சின்னமாகும். இதனை பதினேழாம் நூற்றாண்டில் மொகலாய மன்னர் ஷாஜஹான் கட்டி முடித்தார். இந்தக் கோட்டையில் தீவான் க்ஹாஸ் எனப்படும் தர்பார் மற்றும் சிம்மாசனம் அமைந்திருந்தது. அங்கு அமர்ந்தவாறே மன்னர் ஷாஜஹான் இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சிப்பரப்பு முழுவதிலும் ஆட்சிப்பணிகளை மேற்கொண்டு வந்தார் .

## டில்லியில் உள்ள ஜாமிஆ மஜ்ஜித்

இது இந்தியாவின் ஆட்சிப் பீடமான டில்லியின் மிகவும் முக்கியமான மஸ்ஜிதாகும். இதனை மொகலாய மன்னர் ஷாஜஹான் கி.பி 1656 ல் கட்டி முடித்தார். இது இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் மிகவும் பிரபல மான பள்ளிவாசல்களில் ஒன்றாகும். இது பழைய டில்லியின் மிகவும் மக்கள் நடமாட்டம் மிக்க மற்றும் பிரபலமான மையமான சாந்தினி சவுக் துவங்குமிடத்திலுள்ளது. மஸ்ஜிதுடைய முற்றத்தில் இருபத்தைந்தாயிரத் துக்கும் அதிகமானவர்கள் தொழுகை நிறைவேற்றுகின்றனர். இதனைக் கட்டுவதற்காக பத்து இலட்சம் ரூபாய் செலவானது.

மன்னர் ஷாஜஹான் தன்னுடைய ஆட்சிக்காலத்தில் டில்லி, ஆக்ரா, அஜ்மீர் மற்றும் லாஹூர் நகரங்களில் மிகப்பெரிய மஸ்ஜிதுகளைக் கட்டினார். இவற்றுள் டில்லியிலுள்ள ஜாமிஆ மஸ்ஜித் மற்றும் லாஹூரிலுள்ள பாத் ஷாஹி மஸ்ஜிதுகளின் கட்டிடக்கலையின் அமைப்பு ஏறத்தாழ ஒரேமாதிரி யானதாக உள்ளது.

மஸ்ஜிதுடைய முற்றத்திற்குள் அதன் கிழக்கு, வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் அமைந்துள்ள படிக்கட்டுகளின் வழியாகவே பிரவேசிக்க முடி யும். மஸ்ஜிதின் வடக்குப்பகுதியிலுள்ள வாயிலில் செல்ல 39 படிகளும், தெற்குப்பகுதியிலுள்ள வாயிலில் செல்ல 33 படிகளும், கிழக்குப்பகுதி யிலுள்ள வாயிலில் செல்ல 35 படிகளும் உள்ளன. கிழக்குப்பகுதியிலுள்ள வாயில் மன்னர் பிரவேசிக்கும் வழியாக இருந்தது.

மஸ்ஜித் 261 அடி நீளமும் 90 அடி அகலமும் கொண்டது, அதன் கூரையில் மூன்று குவிமாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 130 அடி உயரமான இரண்டு மினாராக்களும் மஸ்ஜிதின் முகப்பில் கட்டப்பட்டுள்ளன. மஸ்ஜிதின் பின் பகுதியில் நான்கு சிறிய மினாராக்கள் கட்டப்பட்டுள்ளன.

## ஃபதஹ்பூர் சிக்ரி

இதனை மொகலாய மன்னர் அக்பர் கி.பி. 1570 ல் கட்டத்துவங்கினார், இந்த நகரம் கி.பி. 1571 முதல் கி.பி. 1585 வரையிலும் மொகலாய மன்னர் களின் ஆட்சிப்பீடமாக இருந்தது. இது கார்டோவாவின் அஜ்ஸஹ்றா நகரத்தைப்போன்ற ஒரு நகரமாக விளங்கியது. ஆனால், ஃபதஹபூர் சிக்ரி யின் நற்பேறு மதீனதுஸ் ஜ்ஸஹ்ராவை விடவும் சிறந்து விளங்கியது, ஏனெனில், அஜ்ஸஹ்றா நகரம் குறுகிய காலத்திலேயே அழிந்துவிட்டது, இப்போது அங்கே இடிபாடுகளைத்தவிர வேறு ஒன்றுமே இல்லை. ஆனால், ஃபதஹபூர் சிக்ரியின் மகத்தான மாளிகைகள் மற்றும் கட்டிடங்

கள் இன்றும் நிலைத்திருக்கின்றன. உலகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்து இன்றும் மக்கள் இவற்றைக் காண்பதற்காக வந்துகொண்டிருக்கின்றனர். இதனைத்தவிர, மொகலாய மன்னர்களின் கட்டிடக்கலையின் சின்னங்க ளாக விளங்கும் கட்டிடங்களைப்பற்றிய விவரங்கள் எழுதவேண்டுமா னால் அது ஒரு மிகப்பபெரிய நூலாகவே வடிவெடுக்கும்.

## உத்ஸ்மானியர்களின் கட்டிடக்கலை

கி.பி 1299 முதல் கி.பி 1922 வரையிலும் நிலைத்திருந்த ஒரே இஸ்லாமிய மன்னராட்சி உத்ஸ்மானியப் பேரரசின் ஆட்சியாகும். இதன் ஆட்சியாளர்கள் துருக்கியர்களாகவே இருந்தனர். இவர்களுடைய பொற்காலமான உச்சக் கட்ட நிலையில் (கி.பி 16ஆம் நூற்றாண்டு முதல் 17ஆம் நூற்றாண்டு வரை) இப்பேரரசு உலகத்தின் மூன்று கண்டங்களில் பரவியிருந்தது குறிப்பிடத் தக்கது.

உத்ஸ்மானியப் பேரரசின் துவக்க நிலையிலான கட்டிடக்கலை செல்ஜூ கிய கட்டிடக்கலையினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால், ஃகுஸ்துன்தூனியா வெற்றிக்குப்பின் ரோமக்கலாச்சாரத்தின் அடிப்படை யிலான கட்டடிடக்கலையின் தாக்கம் ஏற்பட்டது, இருப்பினும், அதற்குப் பின் மிகப்பெருமளவில் அது மேம்படுத்தப்பட்டது, இறுதியில் உத்ஸ்மா னியர்களின் கட்டிடக்கலையின் மரபு உலகெங்கிலும் பிரபலமடையத் துவங்கியது. உத்ஸ்மானியப் பேரரசின் ஆட்சியாளர்கள் கட்டிடக்கலைக்கு மிகவும் முக்கியத்துவமளித்து வந்தனர். யன்னி நகரம், புரூஸா, அதிரீனா மற்றும் ஃகுஸ்துன்தூனியாவில் மஸ்ஜிதுகள், மத்ரசாக்கள் மற்றும் மாளி கைகள் கட்டப்பட்டன. ஃகுஸ்துன்தூனியாவின் வெற்றிக்குப்பின்னால் இவர்களுடைய ஆட்சிப்பரப்பெல்லைகள் அனைத்திலும் உத்ஸ்மானியப் பேரரசின் கட்டிகடக்கலையின் மகத்துவம் அவர்களுடைய மேன்மையினை எடுத்துக்காட்டும் வகையில் இவையனைத்தும் வரலாற்றுச் சின்னங்களாக விளங்கின. அவை இன்றும் பிரசித்திப்பெற்ற அக்காலத்து வரலாற்றுச் சின்னங்களாகவே திகழ்கின்றன. பதினான்காம் நூற்றாண்டு உத்ஸ்மா னியக் கட்டிடக்கலையின் அடிப்படையிலான மஸ்ஜிதுகளில் செல்ஜூக் கியக் கட்டிடக்கலை எங்குமே காணப்பட்டது, அதன் மிகவும் முக்கியமான சின்னங்கள் புரோஸாவின் பிரபலமான மஸ்ஜிதுகளாகும், அவற்றுள் ஜாமிஆ பாயஜ்ஸீத் மற்றும் ஜாமியா ஊலு மிகவும் முக்கியமானவை. பதினைந்தாம் நூற்றாண்டில் இஸ்தான்பூல் நகரத்தில் புரோஸாவின் கட் டிடக்கலை பின்பற்றப்பட்டது. ஆனால், பெரிய மஸ்ஜிதுகளில் ஆயா ஸூஃபியா ஜாமிஆ மஸ்ஜிதின் அமைப்பிலேயே கட்டப்பட்டது, இது ஒரு பைஸன்த்தியமாதா கோவிலாக இருந்தது. ஃகுஸ்துன்தூனியா வெற்றிக் குப்பின் இது ஒரு மஸ்ஜிதாக மாற்றியமைக்கப்பட்டது. துருக்கிய கட்டிடக்

கலை வல்லுநர்கள் நவீன உத்ஸ்மானியக் கட்டிடக்ககைலையின் அடிப் படையில் எண்ணற்ற உயராமான கட்டிடங்களைக் கட்டியுள்ளனர், அவற் றுள் ஜாமிஆ ஃபாதிஹ், ஜாமிஆ சலீமிய்யா, ஜாமிஆ சுலைமானிய்யா மற்றும் ஜாமிஆ தாகோயே மிகவும் பிரபலமானவையாகும். உத்ஸ்மா னியப் பேரரசின் கட்டிடக்கலையின் மகத்துவம் இன்றும் இக்கட்டிடங்க ளின் வாயிலாகத் தன்னுடைய மேன்மையின் எடுத்துக்காட்டாக விளங்கு கின்றன. உலகின் எந்தப் பகுதியிலும் துருக்கியர்கள் விட்டுச்சென்றுள்ள நகரங்களில் அவர்கள் கட்டியுள்ள மஸ்ஜிதுகள் அதே வழியிலான கட்டிடக் கலையின் அடையாளங்களாகத் திகழ்கின்றன. உத்ஸ்மானியக் கட்டிடக் கலையினைப் பற்றிக் கூறவேண்டுமானாவ் சினான் பாஷாவைப்பற்றிக் கூறாதவரையில் அது முழுமைப்பெறாது. அவர் தன்னுடைய கட்டிடக் கலையின் தனித்தன்மை மற்றும் கலைத்திறனின் அடிப்டையில் அக்கா லத்துக் கட்டிடக்கலையினை அதன் உச்சக்கட்டத்திற்கே கொண்டுசென்றார் என்றால் அது மிகையாகாது. பதினாறாம் நூற்றாண்டின் கட்டிடக்கலை யில் சினானிய மரபு மிகவும் பகிகரங்கமாகவே காணப்படுகின்றது, அவற் றின் மகத்தான சின்னங்கள் இன்றும் காணப்படுகின்றன. ஷஹ்ஜ்ஸாதா மஸ்ஜித் மற்றும் சலீமிய்யா மஸ்ஜித் இந்த மகத்தான கட்டிடக்கலையின் வடிவங்களாகும். சினான் ஃகுஸ்துன்தூனியா, அத்ரீனா, மற்றும் பல நகரங் களில் எண்ணற்ற பெரிய மஸ்ஜிதுகளைக் கட்டியுள்ளார். உத்ஸ்மானியர்கள் தயாரித்த ஃகாபி பீரங்கிகள் மற்றும் தோலமா பூங்காக்களைக்கொண்ட மாளிகைகள் அக்காலத்து கட்டிடக்கலையின் மகத்தான சின்னங்களாக விளங்கின.

* * *

www.uzarfalahi.com